






# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 3 29.01.2026

Srirangam Srimad
Andavan Ashramam



ஸ்ரீமத் ஸ்ரீவராஹ மஹாதேசிகன்
ஸ்ரீமுஷ்ணம் சின்னாண்டவன்

# உள்ளே

## படித்து
## பின்பற்ற வேண்டிய முத்துக்கள்
## உபதேசங்கள்

## முத்துக்கள்

*எவன் எல்லாப் பொருளுமுள்ள மனிதனாவான்?*

*த: எந்த மனிதன் விருப்பு வெறுப்புகள், இன்ப துன் பங்கள், சென்றது வருவது, ஆகிய அனைத்தையும் ஸமமாக பாவிக்கிறானோ அவனே ப்ரம்ம ஞானி ஆகிறான். எல்லாப் பொருளுமுள்ளவன் என்று போற்றவும் பெறுகிறான்.*

*******************************************************************************

*பிரம்மாவிலிருந்து உண்டானவன், முக்குணம் கொண்டவன், அழுக்கானவன், துன்பங்களுக்கு ஆளானவன் இந்த ஜீவன், என்னுடைய அம்சமானவன், ஆனால் இந்த சம்சாரத்தில் துன்பப்படுகிறான். சித்தும், அசித்துவும் கலந்த இந்த உலகம் முழுவதும், பிரம்மாவால் ஆக்கப்பட்டது. எவன் ஆத்மாவில் என்னை உணர்கிறானோ, என் மீது பக்தி செய்கிறானோ, அஞ்ஞானம் என்னும் இருளை நீக்கி, என்னுள் நிலைபெற்று, என்னை ஒருவனே கதி என்று சரணடைகிறானோ, அவன் இந்த முக்குணம் கொண்ட மாயையைக் கடந்து, ஒளியின் பாதையில் சென்று, மாயையையும் அதன் செயல்களையும் நீக்கி, சத்துவ குணத்தில் நிலை பெறுகிறான். நித்தியமான, பிராகிருதமற்ற, சுய ஒளியுடைய, நோயற்ற என் இடத்தை அடைகிறான். பக்தி ஒன்றினாலேயே அடையக்கூடியது, களங்கமற்றது, காலத்திற்கும் அழிவிற்கும் அப்பாற்பட்டது. || 40*

**ப்ருஹத் ப்ரம்ம ஸம்ஹிதை**

*ஆசமனம் செய்யும் போது கைகளில் இரண்டு முறை செய்ய வேண்டும். குளிக்கும்போது, தானம் செய்யும் போது, தேவர்களை வணங்கும் போது, மற்றவர்களை தொடும் போது, பொய் பேசும் போது, சிரிக்கும் போது, எச்சில் பட்டவர்களை தொடும் போது, அசுத்தமான பொருட்களை தொடும் போது, இரத்தம், முடி மற்றும் அழுக்கு பட்டால், கொட்டாவி விடும் போது, கனவு கண்டால், தும்மும் போது, காறித் துப்பும் போது, கோபம் வரும் போது, மற்றும் எந்த செயலை ஆரம்பித்தாலும், முடித்தாலும், ஆசமனம் செய்ய வேண்டும். கேசவாதி நாமங்களை சொல்லி ஆசமனம் செய்தால், உடனடியாக சுத்தம் அடையலாம். || 175*

*******************************************************************************

*காயத்ரி மந்திரம் சொல்லி, தண்ணீரில் குளித்து, கேசவனை நினைத்தால், அவன் எல்லா செயல்களிலும் வெற்றி பெற்று, ஹரியின் பாதத்தை அடைவான். நாராயணனை நினைக்காமல், சுத்தம் செய்தாலும், அது பயனற்றது. அதனால், எப்போதுமே பகவானை நினைக்க வேண்டும். கர்மம் மற்றும் ஞானம் இல்லாமல் செய்யப்படும்*

செயல்கள் எவ்வளவு தூரம் செல்ல முடியாதோ, அதே போல விஷ்ணுவை நினைக்காமல் செய்யப்படும் செயல்களும் ஆகும். காயத்ரி மந்திரம் சொல்லி, தண்ணீரில் நீராடி, ஓம் என்ற மந்திரத்தால் தன்னை சுத்தப்படுத்தி, விஷ்ணுவை நினைத்துக்கொண்டு, எல்லா செயல்களிலும் ஈடுபடலாம். விஷ்ணு தேவதையாக கொண்ட காயத்ரி மந்திரத்தையும், அஷ்டாட்சர மந்திரத்தையும் பிராமணர்கள் சொல்ல வேண்டும்.|| 185

******************************************************************************8**

**ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின் பிருஹத் பிரம்ம சம்ஹிதை -**

நாராயணனின் சொரூபமே வைஷ்ணவ பிராமணன். காயத்ரி மந்திரம் இல்லாமல் ஒருவன் பிராமணனாக முடியாது. உபநிஷதங்களை அறியாமல் காயத்ரி மந்திரத்தின் தத்துவத்தை அறிய முடியாது. மந்திரத்தின் தத்துவத்தை அறியாமல் போனால், அது கர்ம பந்தத்தை மட்டுமே கொடுக்கும். நூறு லட்சம் முறை காயத்ரி மந்திரம் ஜபித்தாலும், அது சித்தியை அளிக்காது. அனைத்து உலகங்களையும் உருவாக்கிய வாசுதேவனின் திருவடிகளை வைகுண்டத்தில் சேவிப்பதன் மூலம் தான் சித்தி கிடைக்கும். சத்துவ குணமுடைய பிராமணன், வைகுண்டத்தை அடைய விரும்பினால், பகவான் விஷ்ணுவை ஆராதிப்பது தவிர, வேறு வழியே இல்லை. விஷ்ணுவை ஆராதிக்கும் போது அவர் ஆவரணமாகவும் அல்லது சரீரமாகவும் கூட இருக்கிறார். || 55

********************************************************************************

**ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின் பிருஹத் பிரம்ம சம்ஹிதை - மூன்றாம் பாதம்**

ஸ்ரீவாசுதேவர் கூறினார் -

ஊர்த்வ புண்ட்ரம் தரிப்பதும், ஏகாதசி விரதம் இருப்பதும், பகவானின் அடியார்களை பூஜிப்பதும் வைஷ்ணவ தர்மம் ஆகும். || 75

********************************************************************************

ஸ்பர்சம்: - த்வக் (மெய்) இந்திரியத்தால் மட்டும் அறியப்படும்

வயவி அவய-ஹுத்வ ஹாரம் க்களின் மென்-ம். அந்த ற பரம்-எப்படும்.

குணம் -ஸ்பர்சம். அது மூவகைப்படும் - சீதஸ்பர்சம், உஷ்ணஸ்பர்சம், அனுஷ்ணாசீதஸ்பர்சம் என்று, ஜலத்தில் சீதம், அக்நியில் உஷ்ணம், ப்ருதிவீ, வாயுவில் அனுஷ்ணாசீதம். பாகத்தால் ஸ்பர்சபேதம் ப்ருதி-வியில், பூனைக்காஞ்சியின் கண்டூதிஜனகம். பாகத்தால் ஏற்படுவது. ம்ருதுஸ்பர்சம், கடினஸ்பர்சம் என்பவையும் பாகஜந்யம், ஸ்வாபாவிக-மன்று. முதல் மூன்றே ஸ்வாபாவிகம் (இயல்பானது).

********************************************************************************

மந்த்ரம்: நமது மனதை அல்வழியில் செல்லாமல் நல்வழியில் செலுத்தி ரக்ஷிப்பதால் மந்த்ரம் என்று பெயர்.

ஜபம்: பிறவித்துன்பத்திற்குக் காரணமான பாபத்தைப் போக்கு-கிறது என்ற அர்த்தத்தில் ஜபம் என்று பெயர் வந்தது.

அஷ்டாக்ஷரஜபம்: - ஸந்த்யாகாலத்தில் காயத்ரீ செய்தபின் அஷ்டாக்ஷர மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்.

********************************************************************************

ப்ரபந்நன், மனம் வாக்கு காயம் ஆகிய முக்கரணங்களாலும் கைக்கொள்ளவும் விலக்கவும் வேண்டியனவற்றுள்

முக்கியமானவை வருமாறு:-

(1) மறக்கவேண்டியது--உலகவின்பங்களை அநுபவிப்பதில் ஆசை.

(2) நினைக்கவேண்டியது-- ஆசார்யனுடையமுதற்கடா க்ஷம் முதலான உபகாரம்.

(3) சொல்லக்கூடாதது--தன் மேம்பாடு.

(4) சொல்லவேண்டியது--த்வயம்.

(5) முக்கரணங்களாலும் விலக்க உரியது--- ப்ரஹ்மவிதபசாரம்.

(6) முக்கரணங்களாலும் கைக்கொள்ள உரியது--- பகவத்- பாகவத-ஆசார்ய கைங்கர்யம்.

*******************************************************************************

**மங்கள அடையாளத்துக்காக**

கணவனுடன் குடும்பம் நடத்தும் பெண்மணி மங்கள அடையாளங்களை அணிந்திருப்பாள். திருமாங்கல்யம், கைவளை, மெட்டி, குங்குமம் முதலியது. அதுபோல, நாம் எல்லாரும் பெருமானுக்கு மனைவிகள்; அவன் கணவன்; அவனுடன் நாம் குடும்பம் நடத்துகிறோம். அதற்கான மங்கள அடையாளம்தான் சங்கு-சக்ர-அடையாளம், திருமண்காப்பு முதலியது.

***************************************************************************

ஸ்ரீகேசவஸோமயாஜி என்று சிறந்த வைதிகர் ஒருவர்! திருமலை நம்பிகள் என்ற ஆசார்யரிடம் சென்று, அவரது தங்கையை தான் விவாஹம் செய்து கொள்வதற்காக பெண் கேட்டார். திருமலை நம்பிகள் மறுத்து விட்டார். "உங்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் ஆகவில்லையே! சங்கு-சக்ர-அடையாளம் இல்லையே! நான் எப்படி பெண் தருவேன்?" என்றாராம்!

"அப்படியானால் அதனையும் அருள வேணும்" என்று இவர் வேண்டி நின்றார். பின்னர், திருமலை நம்பிகளே அவருக்கு சங்குசக்ர அடையாளத்துடன் பஞ்சஸம்ஸ்காரம் செய்வித்தார்; பின், தன் தங்கையையும் விவாஹம் செய்து கொடுத்தார்.

அந்த கேசவஸோமயாஜிக்கு மகனாகப் பிறந்தவர்தான் ஸ்ரீராமானுஜர்!

*****************************************************************************

வைஷ்ணவதீக்ஷை பெற்றவன்தான் கோவிலில் பெருமானுக்கு நெருக்-கமான கைங்கர்யம் செய்யலாம். அகத்தில் திருவாராதனம் செய்யலாம். இல்லாவிட்டால், பெருமாள் பாத்திரத்தைக் கூட தொடக்கூடாது.

***********************************************************

நல்ல ஸ்வபாவமுள்ளவனையும் அயோக்யர்களின் ஸம்பந்தத்தாலே ஸாதுக்கள் ஸந்தேஹப்படுவார்கள். கைகேயியின் பிள்ளையாயிருந்தபடி யாலே, பாதனை கௌஸல்யையும் குஹனும் பாத்வாஜரும் லக்ஷ்மணனும் ஸந்தேஹப்பட்டார்கள்.

*************************************************************

* 'கொடுமையான கர்மங்களைச் செய்கிறவன் இங்கேயே பலனை அநுபவிக்கிறான்' என்பது பழமொழி. கைகேயி ராமனைக் காட்டுக்கு அனுப்பி பர்த்தாவைக் கொன்றாள். எந்தப் பிள்ளைக்காக இந்தக் கர்மத் தைச் செய்தாளோ, அந்தப் பிள்ளையே அவளைப் பலவிதமாய் சிந்தித்து ராமனிடம் பயந்து அவளைக் கொல்லாமல் விட்டான். மந்தரையும் சத்ருக்னனால் தகுந்தபடி சிக்ஷிக்கப்பட்டாள். இந்த ஸ்திரீகளின் அநுஷ் டானங்களால் இந்தப் பழமொழி உலகத்துக்கு வெளியிடப்படுகிறது.

++++++++------*****************************************************

ராமனுக்கு அபிஷேகம் பண்ணுவதாக ராஜா சொன்னபோதும் அவனுக்கு ஸந்தோஷமில்லை. காட்டுக்குப் போகும்படி கைகேயி ஏவின போதும் துக்கமில்லை. அவன் ஸர்வேசுவரன். அவனுக்கு ராஜ்யத்தை அடைவதால் லாபமும், கையில் வந்ததை இழப்பதால் நஷ்டமும் இல்லை. அவன் அவதாரம் பண்ணின காரியத்தை முடிக்க அயோத்தியைவிட்டுக் காட்டுக்குப்போக ஒரு வியாஜத்தைத் தேடிக்கொண்டிருந்தான். அது கைகேயியினால் கிடைத்தது. அவன் தர்மத்தை நன்றாய் ஸ்தாபிக்கிற வனாகையால் இரண்டு தர்மங்களைத் தன் அநுஷ்டானத்தால் வெளி யிட்டான். பிள்ளைகள் பிரியமோ அப்ரியமோ எதைத் தகப்பன் சொன் னாலும், அதைச் சொன்னபடியே பிரீதியுடன் கேட்கவேண்டுமென் பது ஒன்று. நாம் பிரியம் வந்தால் ஸந்தோஷப்படக்கூடாது என்பதும், அப்ரியம் வந்தால் துக்கப்படக்கூடாது என்பதும் மற்றொரு தர்மம். இதற்குத் திதிக்ஷை என்று பெயர்.

*****************************************************************

